1989 அக்டோபர் 31]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தப் பணியிலே, நிரந்தரமாக இருக்கக் கூடியவர்கள் இறந்தால்தான் இந்தத் திட்டம் அவர்களுக்கு உண்டு என்று சொன்னார்கள். ஆனால் பல இலாக்காக்களிலே 340 நாட்கள் வேலை செய்தும்கூட அவர்கள் நிரந்தரமாக்கப்பட வில்லை. இன்னும் சில இலாக்காக்களிலே 10 ஆண்டுகள் கூட தற் காலிகமாக வேலை செய்கிறார்களே, அவர்கள் இறந்துவிட்டால், இந்த குடும்ப நல உதவித் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு உதவி செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, யார் யாரை நிரந்தரமாக ஆக்குவது என்பது வேறு பிரச்சினை. அப்படி அவர்கள் எல்லாம் நிரந்தரமாக ஆக்கப்படுவார்களே யானால், அவர்களுக்கு இந்தத் திட்டத்தால் பயன் உண்டு.

புதுடெல்லி தமிழ்நாடு இல்லம்.

* 4053 **திரு. ஆ. அறிவழகன்:**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் மத்திய தேர்வாணைய (UPSC) நேர்முகத் தேர்விற்காகச் செல்லும் மாணவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் தங்கும் வசதி செய்து தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(ஆ) மத்திய தேர்வாணை (UPSC) நேர்முகத் தேர்விற் காக இந்த மாநிலத்திலிருந்து செல்லும் வேலையில்லா மாண வர்கள்/மற்றவர்கள் புதுடெல்லியிலேயுள்ள தமிழ்நாடு இல்லத்தில் மூன்று தினங்களுக்கு சலுகைக் கட்டணத்தில் தங்க வசதி செய்து தரப்படுகிறது.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, புது டெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு யார் யாருக்கு தகுதி இருக்கிறது என்பது குறித்து, விதிமுறைகள்

ஏதேனும் வகுக்கப்பட்டு இருக்கிறதா, அல்லது சலுகைக் கட்டண விகிதத்தில் தங்குவதற்கு யார் யாருக்கு விதிவிலக்கு தரப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வெளியார் யாரும் அங்கே போய் தங்குவதாக இருந்தால் அவர்களுக்கு சலுகைக் கட்டணம் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை இருந்தால் அல்லது வந்தால் அதனுடைய உறுப்பினர்கள், மற்றும் அரசு அலுவலாளர்கள் சென்று தங்குவதாக இருந்தால், அவர்களுக்கு என்று சலுகைக் கட்டணம் உண்டு. அந்த சலுகைக் கட்டணம், குளிர் சாதன அறையாக இருந்தால் 20 ரூபாயும், குளிர் சாதனம் அல்லாத அறையாக இருந்தால் 5 ரூபாயும், சலுகைக் கட்டணம், நடுத்தரக் கட்டணமாக குளிர்சாதன அறைக்கு 50 ரூபாய், குளிர்சாதனம் அல்லாத அறைக்கு 15 ரூபாய். இவர்கள் அன்னியில் மற்றவர்கள் தங்குவதாக இருந்தால், குளிர் சாதன அறைக்கு 200 ரூபாய், குளிர்சாதனம் அல்லாத அறைக்கு 35 ரூபாய் என்று வகுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புது டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் அறை கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதுவும் பாராளுமன்றத் தேர்தல் போன்ற நேரங்களில் மிகவும் சிரமப்படவேண்டிய நிலையிருக்கிறது. எனவே கூடுதலாக தமிழ்நாடு இல்லத்திற்குக் கட்டிடம் கட்டக்கூடிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, புது டெல்லியிலே 'அறை' கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்கிறார். ஏதாவது விஷமம் செய்தால் 'அறை' நிச்சயமாகக் கிடைக்கும். ஆனால் இந்த அறைகள் கிடைக்க வேண்டுமேயானால் இன்னும் கட்டிடத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த கட்டிடத்தைவிட, ஏற்கெனவே கழக ஆட்சிக் காலத்திலே மற்றொரு கட்டிடம் விரிவான வகையில் கட்டப்பட்டு இருக்கிறது. மேலும் தேவைப்படுமானால் விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

1989 அக்டோபர் 31]

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, டெல்லியிலே நடைபெறுகிற தேர்வுக்குச் செல்லுகின்ற மாணவர்களுக்கு நமது அரசினுடைய இல்லத்தில் இடம் கொடுப்பது ஒரு நல்ல சலுகையாகும். ஆனால் மூன்று நாட்கள்தான் அவர்களுக்கு இடம் கொடுக்கப்படும் என்று சொன்னால், சில சமயங்களில் பரீட்சையிலே கொஞ்சம் இழுப்பு ஏற்பட்டுவிடலாம். அப்படியானால் சில நாட்கள் அதிகப்படியாக தங்க வேண்டியிருப்பதால் அவர்கள் டெல்லியிலே போய் வேறு இடம் சம்பாதிப்பது என்பது சாத்தியம் அல்ல. ஆகவே அந்த மூன்று நாட்கள் என்பதைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அத்தகைய சிறப்பு நேர்வுகள் குறித்து அந்த மாணவர்கள் அங்குள்ள அதிகாரிகளிடத்திலே முறையிடு செய்வார்களேயானால், அது கவனிக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்குச் சொல்லப்படும்.

திரு. இரா. மோகன்: தலைவர் அவர்களே தமிழ்நாடு இல்லத்தில் இப்போது மொத்தமாக எத்தனை அறைகள் விருந்தினர்கள் தங்குவதற்காக இருக்கின்றன? மற்ற மாநில தங்கும் விடுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழ்நாடு இல்லம் உண்மையிலே சிறிய அளவிலேதான் இருக்கிறது. ஆகவே, அந்த தங்கும் விடுதியை விரிவுபடுத்தவும் வேண்டும் இன்னும் அங்கே ஒரு பி.ஆர்.ஓ. போல ஒரு பப்ளிக் ரிலேஷன் ஆபீசர் அங்கே அமைக்கப்பட்டு, இங்கேயிருந்து சென்று தங்குகிறவர்களுக்கு சரியான முறையிலே வழி காட்டுகின்ற நல்ல தகவல்களைத் தருகின்ற ஓர் அமைப்பும் அங்கே உருவாக்கப்பட வேண்டும். அதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(9-15)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, புது டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் மொத்தம் 45 குளிர் சாதனம் பொருத்தப்பட்ட அறைகள் இருக்கின்றன. ஏழு குளிர் சாதனம் பொருத்தப்படாத அறைகள் இருக்கின்றன. 1962 ஆம் ஆண்டு 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அங்கே ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. பிறகு 1976 ஆம் ஆண்டு 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அதற்கு அருகாமையிலே மற்றொரு கட்டிடம் கட்டி

முடிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தமிழக அரசு டெல்லியிலே வாங்கிய அந்த இடம் இந்த இரண்டு கட்டிடங்கள் கட்டுவதற்குத்தான் போதுமானதாக இருக்கிறது. இப்போது புதியதாக அங்கே நிலம் வாங்குவது என்றால் மிக அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.

அது மாத்திரம் அல்ல, இப்போது அந்தக் கட்டிடங்கள் உள்ள இடத்திற்கு அருகாமையிலே நிலம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. வேறு பல மாநிலங்களுடைய மாளிகைகள் பெரிய அளவிலே அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் தொடக்கத்திலேயே நம்முடைய அரசின் சார்பிலே நிலம் வாங்கப்பட்டதும் விஸ்தீரணம் குறைவானது, கட்டிடம் கட்டப்பட்டதும் மிக சிறியதானது. எளிமையாக வாழ வேண்டும் என்பதிலே எண்ணம் கொண்ட பெருந்தலைவர் காமராசர் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடம் என்ற காரணத்தால் அந்த அளவுக்கு அது கட்டப்பட்டு இருக்கிறது. இப்போது தேவை அதிகமாகிவிட்டது. எளிமையை மறுக்கவில்லை நாம். ஆனால் தேவை அதிகமாகி விட்ட காரணத்தால் கட்டிடம் விரிவாகக் கட்டப்பட வேண்டும் என்கின்ற ஆசை இருக்கிறது. ஆனால் இடம் இல்லை.

திரு. எம். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லங்களில் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு குறைவான வாடகையிலே இடங்கள் கிடைக்கின்றன. அதேபோல தமிழ்நாடு அரசின் மற்ற இடங்களில் உள்ள இல்லங்களிலும் அந்த முறை நடைமுறைப்படுத்தவில்லை. ஒவ்வொரு மாவட்டங்களில் இருக்கிற தமிழ்நாடு அரசின் இல்லங்களிலும் இதுமாதிரி சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு குறைவான அளவிலே வாடகைக்கு இடங்கள் தருவதற்கு வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் புது டெல்லியில் உள்ள நம்முடைய தமிழகத்தினுடைய கெஸ்ட் ஹவுசில் சிலருக்கு நிரந்தரமாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த முறை மாற்றப்பட்டு எல்லோருக்கும் கிடைக்கின்ற வாய்ப்பு இப்போது அமையுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1989 அக்டோபர் 31]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிரந்தரமாக யாருக்கும் இப்போது அறைகள் ஒதுக்கப்படுவது இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு ஹவுசில் உள்ள வெஹிகல்ஸ்சிலே எம்.எல்.ஏ.க்கள் போக உரிமை உண்டா? டெல்லியிலே ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும், அபிஷியல்ஸ்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது என்று சொல்லு கிறார்கள். (குறுக்கீடு) அங்கே இருக்கிற வெஹிகல்ஸ், கார்கள் பற்றிச் சொல்லுகிறேன். ஆனால் மற்ற மாநிலங்களின் கெஸ்ட் ஹவுஸ்களுக்கு சென்றால், அந்தந்த மாநிலத்தினுடைய எம்.எல்.ஏ.க்கள் சென்றால், கார்களை எடுத்துச் செல்லுகி றார்கள். கேரளாவிலே இருக்கிற எம்.எல்.ஏ.க்கள் கூட அவ்வாறு உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய இல் லத்தில் கேட்டால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குத்தான் அது ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே தமிழ் நாடு இல்லத்தின் அந்தக் கார்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும், அபிஷியல்ஸ்களுக்கும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது எம்.எல்.ஏ.க்களுக்கும், அமைச்சர்களுக்கும், அதுபோன்று தேர்வு எழுதச் செல்லுகின்ற மாணவர்களுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட் டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வாகன வசதிகள் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும்தான் செய்து தரப்படும். எம்.எல்.ஏ.க்களுக்கும் செய்து தருவது என்றால் அடிக்கடி எம்.எல்.ஏ.க்கள் டெல்லி செல்ல ஆரம்பித்து விடுவார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே டெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் வேறு வேலையாக டெல்லி செல்லுகிறபோது சலுகை அடிப்படையில் அவர்களுக்கு அறைகள் தரப்படுவது இல்லை. அதைத் தருவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அது போல ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சில நேரங்களில் அங்கு செல்கிறார்கள். அவர்களுக்கும் அந்தவசதி இல்லை என்று வருத்தப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கும் ஏற்பாடு செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறைகளிலே இடம் ஒதுக்கி பிறகு இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லும் போது கிடைக்காவிட்டால் முன்னாளுக்கு கொடுத்தீர்கள், இந் நாளுக்கு இல்லையா என்கின்ற ஒரு வாதம் எழும். அதை யெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இந்தச் செயல்களைச் செய்ய முடியும்.

(9-20)

சீர்காழியில் புதிதாக உரிமையியல், குற்றவியல் நீதிமன்றம்.

* 2241 டாக்டர் மா. பன்னீர்செல்வம்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழியில் புதிதாக உரிமையியல், குற்றவியல் நீதி மன்றம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி உரிமையியல் நீதிமன்றம் நிலையான அரசு கட்டிடத்தில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடம் தற்போது கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. சீர்காழி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப் பட்டு நிதி பற்றாக்குறை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. மா. பன்னீர்செல்வம்: பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் உள்ள உரிமையியல், குற்றவியல் நீதிமன்ற கட்டி டங்கள் எல்லாம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டிடத்தில் உள்ள ஏனைய அறைகளில் உள்ள அந்த நாற்காலிகள் எல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து புதியதாக அங்கு கட்டிடம் அமைத்துத் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர் களே, இந்தக் கட்டிடம் இப்போது வட்டாட்சி அலுவலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தினுடைய